# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளும்கட்சி / எதிர் கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.
சட்டமன்ற உறுப்பினர்கள்
(கோவை கிழக்கு, மேற்கு,
தொண்டாமுத்தூர், பேரூர் மற்றும்
சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிகள்),
பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை மற்றும் நீலகிரி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 203 / 2009 / எம்சி. 8 நாள் : 22.1.2009**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக் கூட்டம் வருகின்ற 29.1.2009 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அது சமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 3

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

22/01/09
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

# ஜனவரி 2009 - மாமன்ற சாதாரண கூட்டம் - நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| **வ.எண்** | **இ). தீர்மானத்திற்குரிய பொருள்** |
| 1 | பொறியியல் பிரிவு -சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மேல்நிலைத்தொட்டி கட்டுதல் பணி - ஒப்பந்த விலைப்புள்ளி ஏற்றல் – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 2 | வடக்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவது -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 3 | வடக்கு மண்டலம் - காந்திபுரம் மாநகராட்சி வணிக வளாகக் கடை - ஒப்பந்தப்புள்ளி கோரியது – ஒப்படைப்பு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 4 | தெற்கு மண்டலம் - வின்சென்ட் ரோடு வணிக வளாகக் கடைகள்- வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 5 | தெற்கு மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிக வளாகக் கடைகள் உள்ளிட்டவை- வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 6 | தெற்கு மண்டலம் - வ.உ.சி. பூங்கா உள்ளிட்ட வணிக வளாகக் கடைகள்- வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 7 | தெற்கு மண்டலம் - உக்கடம் பேருந்து நிலைய வணிக வளாகக் கடைகள் உள்ளிட்டவை- வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 8 | தெற்கு மண்டலம் - ஒப்பணக்கார வீதி உள்ளிட்ட வணிக வளாகக் கடைகள்- வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 9 | தெற்கு மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிக வளாகக் கடைகள் உள்ளிட்டவை – வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 10 | தெற்கு மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிக வளாகக் கடைகள் உள்ளிட்டவை – வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 11 | தெற்கு மண்டலம் - காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிக வளாகக் கடைகள் உள்ளிட்டவை – வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 12 | தெற்கு மண்டலம் - டாக்டர் நஞ்சப்பா ரோடு வணிக வளாகம் -அரசு அலுவலகங்கள் – வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 13 | தெற்கு மண்டலம் -தர்மராஜா கோவில் வீதி திருமண மண்டபம்- பராமரிப்பு செய்தல்-மகளிர் சுயஉதவி குழுவிற்கு ஒப்படை செய்தல்- மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 14 | தெற்கு மண்டலம் - ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் - பராமரித்தல்-மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு நிபந்தனைகள் விதித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 15 | வருவாய் பிரிவு - தொழில்வரி உயர்வு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 16 | மேற்கு மண்டலம் -வணிக வளாகக் கடைகள் -வாடகை உயர்வு செய்து உரிமம் நீடித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 17 | மேற்கு மண்டலம் - குத்தகை இனங்கள் - ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவது -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 18 | கிழக்கு மண்டலம் -குத்தகை இனங்கள் - ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவது -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 19 | தெற்கு மண்டலம் -நேரு விளையாட்டு அரங்கம் அருகில் நீரியல் பூங்கா அமைத்தல்-தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு குத்தகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்தல்-அரசிற்கு பிரேரனை அனுப்புதல் மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |

| | |
|---|---|
| 20 | பொறியியல் பிரிவு -பழைய உபயோகமற்ற பொருள்கள்-ஏலம் கோரியது- மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 21 | பணியமைப்பு -கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பதவியிலிருந்து நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பதவிக்கு தேர்ந்த பெயர் பட்டியல் தயாரித்தல்-மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 22 | பொறியியல் பிரிவு -5 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 23 | பொறியியல் பிரிவு - மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்தல்-மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 24 | வடக்கு மண்டலம் -நகரமைப்புப் பிரிவு - விளாங்குறிச்சி கிராமம் - க.ச.எண். 452 – நில உரிமை மாற்றம் செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக |
| 25 | நகரமைப்புப் பிரிவு - மாநகராட்சி பகுதியில் உள்ள கட்டிடங்களுக்கு மின் இணைப்பு வழங்க தடையின்மை சான்றிதழ் வழங்குவது – மாமன்றம் முடிவு செய்தல் -தொடர்பாக |
| 26 | வடக்கு மண்டலம் -நகரமைப்பு பிரிவு -வார்டு எண் 18 –வரி விதிப்பு எண் 322357, 32048, 323945 – நிலுவை வரிகளை ரத்து செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக |
| 27 | வடக்கு மண்டலம் - சொத்து வரி – தீர்ப்பாயத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது – அமுல்படுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 28 | பொறிறியல் பிரிவு -வார்டு எண் 2 - பீளமேடு மாநகராட்சி உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல் - ஒப்பந்த விலைப்புள்ளி கோரியது – மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக. |
| 29 | பொறியியல் பிரிவு - வரன்முறைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் - ஓராண்டு காலத்திற்கு நீடிப்பு செய்தல் -மாமன்ற அனுமதி கோருதல்-தொடர்பாக |
| 30 | கணக்குகள் குழு- கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் - மாமன்றம் பதிவு செய்தல்-தொடர்பாக |
| 31 | கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு- கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் -மாமன்றம் பதிவு செய்தல்-தொடர்பாக |
| 32 | நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக் குழு- கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் -மாமன்றம் பதிவு செய்தல்-தொடர்பாக |
| 33 | வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு - கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் -மாமன்றம் பதிவு செய்தல்-தொடர்பாக |
| 34 | பொதுப்பிரிவு - ஊதியக்குழு இடைக்கால நிலுவை –அரசாணை வெளியிடப்பட்டது – பதிவு செய்தல்-தொடர்பாக. |

நன்றியுரை

இணைப்பு- 2

## திருக்குறள்

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

(குறள் -616)

## விளக்கம்

முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. முயற்சிதான் சிறப்பான செயல்பாடுகளுக்குக் காரணமாக அமையும்.

திருவள்ளுவர்.

---

## ஆ. தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

---

## பொருள் எண் 1

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 18.12.08 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைப்பிற்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4252/08/ எம்.டி.2 | வார்டு எண் 11 சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மேல்நிலைத் தொட்டி கட்டுதல் மற்றும் பகிர்மானக்குழாய் அமைத்தல் | 3.00 | 06.11.08 இரண்டாம் அழைப்பு | திரு. ஆர். நடராஜன் | 4.35 அதிகம் | 3.10 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 4252/08/எம்.டி.2

**மா.ம.தீர்மானம் எண் : 318 நாள் : 29.01.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

பொருள் - குத்தகை இனங்கள்-கோயம்புத்தூர் மாநகராட்சி –வடக்கு மண்டலம் 2009-2010ம் ஆண்டிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகை இனங்கள் ஒப்படைத்தல் மற்றும் பொது ஏல நிபந்தனைகள் மாமன்றத்தின் ஒப்புதல் பெறுதல்-சார்பு

--------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்கண்ட 1 முதல் 6 முடிய உள்ள இனங்களுக்கு 01.04.2009 முதல் 31.03.2010 முடிய உள்ள காலத்திற்கு ஏலஇனங்களில் பெறப்படும் வருவாய் வசூலித்து கொள்வதற்கு உரிமம் வழங்க பொதுஏலம் மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது.

இனங்கள்

| வ. எண் | இனங்கள் | இடம் | உரிமம் |
|---|---|---|---|
| 1 | நவீன பொதுக்கழிப்பிடம் | கணபதி | கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 2 | நவீன பொதுக்கழிப்பிடம் | சத்தி ரோடு | கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 3 | நவீன பொதுக்கழிப்பிடம் | சீனிவாசபுரம் காந்திபுரம் | கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 4 | சத்தி ரோடு புல் மார்க்கெட் | சத்தி ரோடு | கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 5 | சத்தி ரோடு ஆடு,மாடு அறுவை மனை | சத்தி ரோடு | கட்டணம் வசூலிக்கும் உரிமை |
| 6 | ஆம்னி பேருந்து நுழைவுக் கட்டணம் | சத்தி ரோடு | கட்டணம் வசூலிக்கும் உரிமை |

மேற்காணும் வரிசை எண் 1 முதல் 6 வரை காணும் இனங்களுக்கு அனைத்து ஏலதாரர்களும் கலந்து கொள்ளும் வகையில் ஏலம் கோரவும் அதற்கான ஏல விளம்பர அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும், மேலும் பொது ஏல சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 29.12.2008 தீர்மான எண். 4-ல் ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 15012/2008/அ4(வ)

**மா.ம.தீர்மானம் எண் : 319 நாள் : 29.01.2009**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 29.12.08 ம் தேதிய தீர்மானம் எண். 4ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 3

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சி வணிக வளாக கடைகளில் தற்போது காலியாக உள்ள காந்திபுரம் 7வது வீதி தொடர்ச்சி வணிக வளாகத்தில் கடை எண். 1ம் மற்றும் பட்டேல் ரோடு வணிக வளாகத்தில் கடை எண். 26, 29, 30 ஆகிய மூன்று கடைகள் மற்றும் சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட்டில் 14 கடைகளுக்கு 06.10.2008ல் நடைபெற்ற மறு பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்ட உச்ச கேள்வியை அங்கீகரித்து கடையை ஒதுக்கீடு செய்வது – தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாநகராட்சி வணிகவளாக கடைகளில் தற்போது காலியாக உள்ள காந்திபுரம் 7வது வீதி தொடர்ச்சி வணிக வளாகத்தில் கடை எண். 1ம் மற்றும் பட்டேல் ரோடு வணிக வளாகத்தில் கடை எண். 26, 29, 30 ஆகிய மூன்று கடைகள் மற்றும் சீனிவாசபுரம் தினசரி மார்க்கெட்டில் 14 கடைகளும் தற்போது காலியாக உள்ளது.

மேற்கண்ட கடைகளுக்கு மறுபொது ஏலம் 06.10.2008அன்று நடைபெற்றது. 7வது வீதி தொடர்ச்சி கடை எண். 1க்கு மட்டும் ஏலம் கோரி உச்ச கேள்வி கேட்கப்பட்டது. ஏலத்தில் கலந்துகொண்டு ஏலம் கோரிய விபரம் கீழே வருமாறு.

| அமைவிடம் மற்றும் கடை எண். | ஏலதாரர் பெயர் | ஏலத்தில் கேட்கப்பட்ட உச்ச கேள்வி ரூ. | ஒப்பந்தப் புள்ளிகள் கோரிய தொகை ரூ. |
|---|---|---|---|
| காந்திபுரம் 7வது வீதி தொடர்ச்சி கடை எண்.1 | 1. திரு. T. ரகுபதி | 3,790/- | 3,240/- |
| | 2. திரு. V.M. நாச்சிமுத்து | 3,780/- | --- |
| | 3. திரு. C. அரசு | 3,800/- | 4,200/- |
| | 4. திருமதி. B. கமலாவதி | 3,785/- | 3,330/- |

கடை எண்.1-க்கு திரு. C. அரசு அவர்கள் ஒப்பந்தப் புள்ளி மூலம் உச்சத் தொகையாக ரூ.4,200/- கொடுத்துள்ளார். கடந்த 10.09.2008 அன்று நடைபெற்ற மறு பொது ஏலத்தில் மேற்கண்ட கடைக்கு ரூ.3,105/- உச்ச கேள்வியாக கேட்கப்பட்டிருந்தது. அரசு மதிப்பு ரூ.3,750/-க்கு குறைவாக இருந்ததால் அன்று ஏலத்தில் கடை ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

ஆகவே, மறு பொது ஏலம் 06.10.2008 அன்று நடத்தப்பட்டது. இந்த ஏலத்தில் உச்ச கேள்வியாக ரூ.4,200/-கேட்கப்பட்டுள்ளதால் திரு. C. அரசு அவர்களின் உச்ச கேள்வியான ரூ.4,200/-ஐ ஏற்று கடையை ஒதுக்கீடு செய்யலாம். மேலும் மற்ற காலிகடைகள் ஏலம் கோர யாரும் முன் வரவில்லையாதலால் காந்திபுரம் 7வது வீதி கடை எண்.1ஐ மட்டும் உச்ச கேள்வி ஏற்று கடை ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் 29.12.2008 தீர்மான எண்.3ன்படி ஒப்புதல் பெறப்பட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்: 11502/2008/அ4(வ)

மா.ம.தீர்மானம் எண் : 320 நாள் : 29.01.2009

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 29.12.08 ம் தேதிய தீர்மானம் எண். 3ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 4

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

---

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1) வின்சென்ட் ரோடு வணிக வளாகம்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | கே.பெ.நிசாநதீன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 2 | 2 | ஜே.எம்.இஸ்மாயில் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 3 | 3 | ஏ.எஸ்.அப்துல் மஜீத் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 4 | 4 | எம்.எம்.இப்சாப் அலி | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 5 | 5 | எஸ்.எம்.நிஜாமுதீன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 6 | 6 | ஏ.அப்துல் ரஹ்மான் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 7 | 7 | அப்துல் ஜலீல் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 8 | 8 | எம்.மொகமது | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 9 | 9 | எம்.முருகேஷ் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 10 | 10 | ஜாகீர் உசேன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 11 | 11 | அலாவுதீன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 12 | 12 | எச்.ஷாஜஹான் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 13 | 13 | அப்துல் ரஹ்மான் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 14 | 14 | ஜியாவுதின் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 15 | 15 | எஸ்.எம்.உபைது ரஹ்மான் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | 16 | எஸ்.என்.அப்துல் மஜீத் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 17 | 17 | எம்.அஸ்ரப் அலி | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 18 | 18 | டி.ஜி.லதூப்ரஹ்மான் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 19 | 19 | மொகமது நாசர் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 20 | 20 | ஜாகீர் உசேன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 21 | 21 | சீராஜீதின் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 22 | 22 | சாகுல் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 23 | 23 | ஷாஜகஹான் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 24 | 24 | அப்பாஸ் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 25 | 25 | டி.ஏ.பாதுஷா | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 26 | 26 | அக்பர் அலி | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 27 | 27 | மொகமது ரஷித் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 28 | 28 | வே.வி.அகமது கபீர் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 29 | 29 | ஜே.எம்.ஜாபர் சாதிக் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 30 | 30 | கே.எம்.இஸ்மாயில் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |
| 31 | 31 | எம்.எம்.நலசாத் அலி | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 738/- | 849/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11416/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 321 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

---

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1) காமதேனு மார்க்கெட் வணிக வளாகம்

| வ. எண் . | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | மணி | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 2 | 2 | பாலசுப்ரமணியம் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 3 | 3 | மைலத்தாள் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 4 | ரங்கசாமி | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 5 | 5 | வெங்கடாசலம் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 6 | 6 | நாகராஜ் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 7 | 7 | ராமமூர்த்தி | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 8 | 8 | பால்ராஜ் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 9 | 9 | அரங்கசாமி | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 10 | 10 | நீலம்மாள் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 11 | 11 | ராஜ் (லேட்) | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 12 | 12 | கந்தசாமி | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 13 | 13 | பாலாஜி | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 14 | 14 | சுப்பண்ண கவுண்டர் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |
| 15 | 15 | சின்னக்குட்டி V.R.ஆறுமுகம் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 365/- | 420/- |

2) காந்திபுரம் நகர பேருந்து நிலைய வணிய வளாகம் (உடல் ஊனமுற்றோர்)

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | K.காளிமுத்து | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 2 | 2 | P.கைறுநிசா | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 3 | 3 | C.V.பாலு | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 4 | 5 | ராமசந்திரன் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 5 | 10 | D.தனம் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 6 | 11 | S.ராமசந்திரன் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 7 | 12 | K.M.ஹனிபா | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 8 | 13 | A.C.காதர் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 9 | 14 | T.பழனியம்மாள் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 10 | 15 | தர்சித் பேகம் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |
| 11 | 16 | K.பாக்கியம் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 92/- | 106/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11604/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 322 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

----------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வளாகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1.வ.உ.சி.பூங்கா கடைகள்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 6 | 6 | திரு.அசோக் | 01.10.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2010 | 2,250/- | 2,588/- |

2) ஆவின் பாலகம்

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஆவின் பாலகம் (மத்திய பேருந்து நிலையம்) | 03.10.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 1,775/- | 2,041/- |
| 2 | 2 | ஆவின் பாலகம் (V.O.C . Park ) | 14.06.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 1,775/- | 2,041/- |
| 3 | 3 | ஆவின் பாலகம் (Gandhipuram Town Bus Stand) | 01.05.2003 – 30.04.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,775/- | 2,041/- |

3) ஆடிஸ் வீதி வணிக வளாகம்

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | ஐயூப்கான் | 01.04.2005 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 365/- | 420/- |
| 2 | 2 | P.பொன்னுசாமி | 01.04.2005 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 365/- | 420/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11607/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 323 நாள் : 29.01.2009**

பொருளில் வரிசை எண். 2 ஆவின் பாலகம் குறித்து உரிய ஆய்வு மேற்கொண்டு மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண். 1, வ.உ.சி. பூங்கா கடைகள், வரிசை எண். 3 ஆடிஸ் வீதி வணிக வளாகம் கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

----------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1. என்.எச்.ரோடு டீலக்ஸ் டாய்லெட் (அருகில்)

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | K.P.மொகமத் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 9,508/- | 10,934/- |

2) உக்கடம் பேருந்து நிலைய வணிக வளாகம்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | அண்ணா ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர் கூட்டுறவு சங்கம் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 2,515/- | 2,892/- |
| 2 | 5 | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 707/- | 813/- |
| 3 | 6 | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 707/- | 813/- |
| 4 | 9 | ஐவர் ஆறுமுகம் | 01.04.2004 - 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 9,200/- | 10,580/- |
| 5 | 10 | ஐவர் ஆறுமுகம் | 01.04.2004 - 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 7,188/- | 8,266/- |
| 6 | 11 | டான் பாஸ்கோ அன்டி இல்லம் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 707/- | 813/- |
| 7 | 12 | டான் பாஸ்கோ அன்டி இல்லம் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 707/- | 813/- |
| 8 | 13 | மும்தாஜ் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2008 | 3795/- | 4,364/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11608/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 324 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1) ஒப்பணக்கார வீதி வணிக வளாகம்

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | M.சண்முகம் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 7,262/- | 8,351/- |
| 2 | 2 | P.P.பாஸ்கரன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 2,575/- | 2,961/- |
| 3 | 3 | M.திலகன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 4,325/- | 4,974/- |
| 4 | 4 | C.K.ஜோசப் | 01.04.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,581/- | 1,818/- |
| 5 | 5 | C.K.ஜோசப் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 1,650/- | 1,898/- |
| 6 | 7 | அப்துல் கலாம் | 01.04.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,278/- | 1,470/- |
| 7 | 8 | K.ஜோசப் | 01.04.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,408/- | 1,619/- |

2) உப்புகிணர் சந்து வணிக வளாகம்

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | சேது மாதவன் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 6,210/- | 7,141/- |

3) திரு.வி.க.மார்க்கெட் வணிக வளாகம்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 27 | சாந்தி ஜெகதிசன் | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,000/- | 2,300/- |
| 2 | 28 | ஹரி | 01.09.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 2,550/- | 2,933/- |
| 3 | 30 | சஜிதா | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,000/- | 2,300/- |
| 4 | 31 | அம்பலவாணன் | 01.09.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,550/- | 2,933/- |
| 5 | 50 | சம்சுதீன் | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,550/- | 2,933/- |
| 6 | 51 | எ.சாகுல் அமீது | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,550/- | 2,933/- |
| 7 | 52 | சகாபுதீன் | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,000/- | 2,300/- |
| 8 | 53 | எம்.கருணாநிதி | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,850/- | 2,128/- |
| 9 | 54 | ஹரி | 01.09.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 2,550/- | 2,933/- |
| 10 | 55 | K.சுஜிதா | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,712/- | 1,969/- |
| 11 | 56 | S.சங்கர் | 01.05.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 2,673/- | 3,074/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11609/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 325 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

----------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1) காந்திபுரம் நகர பேருந்து நிலையம் – உடல் ஊனமுற்றோர் வணிக வளாகம்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | A.துரைராஜ் | 01.05.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 1,256/- | 1,444/- |
| 2 | 2 | வெங்கிடகிருஷ்ணன் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 1,256/- | 1,444/- |
| 3 | 3 | ஆலிவர் | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 1,256/- | 1,444/- |

2) டேன் டீ கடைகள்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | கே.ஜி.தியேட்டர் (எதிர்புறம்) | 01.07.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 638/- | 734/- |
| 2 | 2 | உக்கடம் பேருந்து நிலையம் | 01.07.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 638/- | 734/- |
| 3 | 3 | தியாகி குமரன் மார்க்கெட் | 01.07.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 638/- | 734/- |

3) உக்கடம் டவுன் பஸ் (உட்பகுதி) வணிக கடைகள்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | R.வேலுமணி | 01.07.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2010 | 1,500/- | 1,725/- |
| 2 | 2 | Aavin Milk | 01.07.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2010 | 331/- | 381/- |
| 3 | 3 | Eastern Scales Pvt. Ltd | 01.07.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,035/- | 1,190/- |
| 4 | 4 | Eastern Scales Pvt. Ltd | 01.07.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,035/- | 1,190/- |
| 5 | 5 | Eastern Scales Pvt. Ltd | 01.07.2003 – 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 1,035/- | 1,190/- |
| 6 | 6 | Gopal STD Booth | 01.07.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2010 | 662/- | 761/- |
| 7 | 7 | The Director , Coimbatore Periayar Dist. Co-op Karuppatti Sales Depo | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2010 | 600/- | 690/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11610/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 326 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

----------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1) காந்திபுரம் நகர பேருந்து நிலையம் - அண்ணா வணிக வளாகம்

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | முத்துராஜ் | 01.04.2004 – 31.03.2007 | 01.04.2007 – 31.03.2010 | 15,086/- | 17,349/- |
| 2 | 2 | G.பழனிசாமி | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 9,162/- | 10,536/- |
| 3 | 3 | K.ராமச்சந்திரன் | 01.04.2004 - 31.03.2007 | 01.04.2007 - 31.03.2010 | 10,258/- | 11,797/- |
| 4 | 4 | K.ராமச்சந்திரன் | 01.04.2007 - 31.03.2010 | 01.04.2008 - 31.03.2011 | 10,761/- | 12,375/- |
| 5 | 5 | N.K.ராமச்சந்திரன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 9,254/- | 10,642/- |
| 6 | 7 | T.கோபால் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 9,225/- | 10,609/- |
| 7 | 8 | கேசவன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 7,744/- | 8,906/- |
| 8 | 9 | S.ராஜ் மோகன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 8,147/- | 9,369/- |
| 9 | 10 | C.L.அந்தோனி | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 8,067/- | 9,277/- |
| 10 | 11 | S.மார்ட்டின் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 8,649/- | 9,946/- |
| 11 | 12 | T.ஜெயராஜ் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 8,447/- | 9,714/- |
| 12 | 13 | A.லோகநாதன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 7,150/- | 8,223/- |
| 13 | 14 | S.ராஜ்மோகன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 6,738/- | 7,749/- |
| 14 | 15 | முரளிதரன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 7,441/- | 8,557/- |
| 15 | 16 | R.P.பத்மநாபன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 9,137/- | 10,508/- |
| 16 | 17 | T.ஜெயராஜ் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 7,039/- | 8,095/- |
| 17 | 18 | S.ராமமூர்த்தி | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 8,057/- | 9,266/- |
| 18 | 19 | V.M.நாச்சிமுத்து | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 6,453/- | 7,421/- |
| 19 | 20 | T.நடராஜ் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 7,045/- | 8,102/- |
| 20 | 21 | A.லோகநாதன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 8,273/- | 9,514/- |
| 21 | 22 | பாலசுப்ரமணியம் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 8,270/- | 9,511/- |
| 22 | 23 | R.சின்னப்பன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 –31.03.2011 | 9,249/- | 10,636/- |

2) என்.எச்.ரோடு (புதிய கடைகள்)

| வ. எண் | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | தங்கவேலு | 01.04.2005 – 31.03.2008 | 01.04.2008 – 31.03.2011 | 11,415/- | 13,127/- |
| 2 | 2 | சுதமாரன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 10,286/- | 11,829/- |
| 3 | 3 | மணி | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 11,414/- | 13,126/- |
| 4 | 5 | பொன்னுசாமி | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 10,836/- | 12,461/- |
| 5 | 6 | நடராஜன் | 01.04.2005 - 31.03.2008 | 01.04.2008 - 31.03.2011 | 13,403/- | 15,413/- |
| 6 | 7 | மாவட்ட கதர் கிராமத் தொழில் | 01.04.2004 - 31.03.2007 | 01.04.2007 - 31.03.2010 | 1,504/- | 1,730/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11605/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 327 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 11

பொருள் - கோவை மாநகராட்சி தெற்கு மண்டலம் - வணிக வளாகம் - வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டித்துக் கொடுத்தல் - சம்பந்தமாக.

-----------------------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வணிக வளாகத்தில் உள்ள கீழ்கண்ட கடைகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்றாண்டுகள் முடிவடைந்த கடைகளுக்கு மேலும் மூன்றாண்டுகளுக்கு வாடகை உயர்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றை மூன்று ஆண்டுகளுக்கு மேலும் பொது ஏலத்தில் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறி முறைகளை பின்பற்ற அரசு ஆணை எண். 147 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை (ந.நி.4) நாள். 30.12.2000 பத்தி எண். 4(3)ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிமத் தொகை சென்ற ஆண்டு உரிமத் தொகையைவிட 15 சதவீதம் கூடுதலாக இருக்க வேண்டும் என உள்ளது. அதன்படி கீழ்கண்ட வணிக வாளகக் கடைகளுக்கு தற்போதைய வாடகையிலிருந்து 15 சதவீதம் உயர்வு செய்து பட்டியல் இடப்பட்டுள்ளது. அவசர அவசியம் கருதி வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுத் தலைவரின் முன்அனுமதி (நாள் 17.12.08) பெறப்பட்டுள்ளது.

1 காந்திபுரம் நகர பேருந்து (மேற்கு) (உடல் ஊனமுற்றோர் கடைகள்)

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | செல்வி. K.விமலா | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 2 | 2 | K.முத்துசாமி | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 3 | 3 | M.அபாஸ் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 4 | 4 | T.S.மணி | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 5 | 5 | S.ரவி | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 6 | 6 | A.சின்னசாமி | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 7 | 7 | M.துரை | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 350/- | 403/- |
| 8 | 8 | H.M. ஹானிபா | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 304/- | 350/- |
| 9 | 9 | K.ஜெயராமன் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 304/- | 350/- |
| 10 | 9A | A.பாலன் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 304/- | 350/- |

2 ஈஸ்வரன் கோவில் வீதி – சுவர் ஓரம் உள்ள கடைகள்

| வ. எண். | கடை எண் | பெயர் | தற்போதுள்ள உரிமம் காலம் | புதுப்பிக்கப்பட வேண்டிய உரிமம் காலம் | தற்போது உள்ள மாத வாடகை | 15% உயர்வு செய்த வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | V.A.அக்பர் உசேன் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 2 | 2 | அப்துல் ஹமீது | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 3 | 3 | X.M.யூசப் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 4 | 4 | T.M.H. கபீர் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 5 | V.M. முகம்மது பாஷா | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 6 | 6 | C.P.அப்துல் ரஹீம் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 7 | 7 | V.இப்ராஹீம் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 8 | 8 | V.ஷோக் முஜீபா | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 9 | 9 | S.கலில் ரஹீமான் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 10 | 10 | V.I. பத்ருதின் | 01.04.2003- 31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 11 | 11 | C.M.S.அப்துல் வாக்யூ | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 12 | 12 | அப்துல் ஜப்பார் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 13 | 13 | வரதராஜன் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 14 | 14 | X.S. கமாலுதீன் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 15 | 15 | அப்துல் ஹக்கீம் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 16 | 16 | M.S. அப்துல் ரஹ்மான் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 17 | 17 | K.A.ஹக்கீம் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 18 | 18 | மணிகண்டன் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 19 | 19 | A.K.ராஜன் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |
| 20 | 20 | A.அப்துல் சலீம் | 01.04.2003 –31.03.2006 | 01.04.2006 – 31.03.2009 | 760/- | 874/- |

அலுவலகக் குறிப்பு : ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண்.11606/08/அ10

**மா.ம.தீர்மானம் எண் : 328 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 12

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட டாக்டர் நஞ்சப்பா சாலை வணிக வளாகத்தில் செயல்பட்டு வரும் கீழ் குறிப்பிட்டுள்ள அரசு அலுவலகங்களுக்கு வாடகை உயர்வு செய்யப்பட்டு மூன்று வருடங்கள் முடிவடைந்து விட்டதால் மேற்கொண்டு மூன்று வருடங்களுக்கு அரசு ஆணை (டி) எண். 135 நாள் 13.07.94ன் படி 15% வாடகை உயர்வு செய்து உரிமம் புதுப்பிக்கப்பட வேண்டியுள்ளது. எனவே கீழ் குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயர்வு செய்து பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ.எண். | அரசு துறை அலுவலகம் | உரிமம் காலம் | தற்போதைய வாடகை | 15% உயர்வு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|---|
| 1 | முதன்மை மின்சார ஆய்வாளர் அலுவலகம் | 1.4.2008 to 31.03.2011 | 27,508/- | 31,634/- |
| 2 | வணிக வரி அலுவலர் பீளமேடு, தெற்கு வட்டம் | 01.04.2008 to 31.03.2011 | 5,753/- | 6,616/- |
| 3. | வணிகவரி அலுவலர் பீளமேடு, வடக்கு (அ) | 01.04.2007 to 31.03.2010 | 7,487/- | 8,610/- |
| 4. | நகர ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் | 01.04.2008 to 31.03.2011 | 17,940/- | 20,631/- |
| 5. | காவல் துறை கண்காணிப்பாளர் குற்றப்புலனாய்வுப் பிரிவு | 01.04.2008to 31.03.2011 | 9,732/- | 11,192/- |

மேற்குறிப்பிட்டுள்ள அரசு அலுவலகங்களுக்கு அதன் எதிரே குறிப்பிட்டுள்ளவாறு வாடகை உயர்வு செய்ய அவசர அவசியம் கருதி வரி விதிப்பு மற்றும் நிதிகுழு தலைவரின் முன் அனுமதி (29.12.08) பெற்று மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். எண்.4792/03/அ10 (தெ)

**மா.ம.தீர்மானம் எண் : 329 நாள் : 29.01.2009**

**பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.**

**01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**பொருள் எண் 13**

**பொருள் : கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் - தர்மராஜா கோவில் வீதி திருமண மண்டபம் - பராமரிப்பு பணிகளுக்காக ஸ்ரீபரமேஸ்வரி மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ஒப்படை செய்வது – தொடர்பாக.**

**மேற்படி மண்டபமானது 43வது வார்டு பகுதியில் 7792 ச.அ. பரப்பளவு மற்றும் 8306 ச.அ.பரப்பளவு திரவிடம் ஆக மொத்தம் ரூ.161.28 லட்சம் செலவில் கட்டப்பட்டதாகும். இந்த மண்டபத்தை அரை நாள் வாடகை ரூ.2000/- எனவும் , தின வாடகை ரூ.4000/- எனவும் நிர்ணயம் செய்து மண்டபத்தை பராமரிக்கும் பணிக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி மூலம் ஒப்படை செய்யலாம் என மாமன்றம் தனது தீ.எண்.170 நாள் 29-9.03 ல் தீர்மானம் நிறைவேற்றியது. இதையடுத்து கடந்த 24.02.04, 17.03.2004,22.04.04 மற்றும் 19.05.2004 ஆகிய தேதிகளில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்திட பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டு ஏலம் நடத்தப்பட்டது. ஆனால் நிர்ணயித்தத் தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை.**

**இதனிடையே மேற்படி மண்டபத்தின் வைப்புத்தொகை ரூ.2,00,000/- ஐ ரூ.1,00,000/- ஆகவும் காப்புத்தொகை ரூ.1,00,000/- ஐ ரூ.50,000/- ஆகவும் சொத்து மதிப்பு சான்றிதழ மதிப்புத் தொகை ரூ.20,00,000/- ஐ ரூ.5,00,000/- ஆகவும் மாமன்ற தீ.எண்.51, நாள். 30.06.2004 மூலம் குறைத்து சலுகைகள் வழங்கப்பட்டது. இதையடுத்து மேலும் 03.08.2004, 11.09.2004 மற்றும் 25.10.2004 ஆகிய தேதிகளில் ஏலம் நடத்தப்பட்டது. ஆனால் உரியத்தொகை செலுத்தி ஏலம் கோர ஒருவரும் முன் வரவில்லை.**

**எனவே மேற்படி மண்டபத்தை பராமரிக்கும் பணிக்கு தென்றல் சிக்கன நாணய சங்கம் மற்றும் அன்னை மகளிர் சுய உதவிக்குழு ஆகிய இரு மகளிர் குழுக்களிடம் 25.07.2005 முதல் 3 ஆண்டுகளுக்கு ஒப்படை செய்ய மாமன்றம் தனது தீர்மான எண்.259 நாள் 31.03.2005 முடிவு செய்தது.**

**தற்போது மேற்படி காலக்கெடுவானது முடிவடைந்து விட்டதால் எற்கனவே அனுமதி வழங்கப்பட்ட மா.ந.ம.தீ. எண்.259 நாள். 31.03.2005ன்படியும் மற்றும் ஏற்கனவே உள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் அடுத்த மூன்றாண்டு காலத்திற்கு விண்ணப்பம் செய்துள்ள ஸ்ரீபரமேஸ்வரி மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ஒப்படை செய்வது குறித்து மன்றத்தின் பரிசீலனைக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு- ஒப்புதல் அளிக்கலாம்.** **ந.க.எண். 9678/08/அ5**

**மா.ம.தீர்மானம் எண் : 330 நாள் : 29.01.2009**

**அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 14

கோயமுத்தூா் மாநகராட்சி வாா்டு பகுதிகளில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கட்டி உபயோகத்தில் உள்ள ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்கள் (ISP Toilets) தற்போது அந்தந்த பகுதிகளில் உள்ள மகளிா் சுய உதவிக்குழுக்கள் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவற்றில் சில கழிப்பிடங்கள் நன்றாக பராமரிக்காமலும் ஒரு சில கழிப்பிடங்கள் மகளிா் சுய உதவிக்குழு என்ற பெயரில் தனி நபா்களிடம் உள்ளதாக அறியப்படுகிறது.

இது போன்ற குறைபாடுகளை சுட்டிக்காட்டி வேறு சுய உதவிக்குழுக்களுக்கு மாற்றம் செய்து தரக்கோரி அந்தந்த வாா்டு மாமன்ற உறுப்பினா்களிடமிருந்து கோரிக்கைகள் வருகின்றன. அவ்வாறு கழிப்பிட பராமரிப்பினை மாற்றம் செய்திட தெரிவித்தால், சில மகளிா் சுய உதவிக்குழுவினா் மாற்றம் செய்திட மறுப்பு தெரிவிக்கின்றனா்.

இவற்றினை சரி செய்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு உள்ள கழிப்பிடங்களை மகளிா் சுய உதவிக்குழுக்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகள் விதித்து அதன் அடிப்படையில் நிா்வகிக்க சுகாதார நிலைக்குழு தீா்மான எண். 58/2007-2008 நாள்.15.12.08ல் அனுமதி பெற்று மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. ஒவ்வொரு கழிப்பிடமும் அப்பகுதியிலுள்ள ஓா் மகளிா் சுய உதவிக்குழுவிடம் ஓா் ஆண்டிற்கு மட்டும் பராமரிக்க அனுமதிக்கப்படும். இந்த ஓா் ஆண்டில் நல்ல முறையில் பராமரித்திருந்தால் மட்டுமே அவா்களுக்கு அடுத்த ஓா் ஆண்டுக்கு மட்டும் பராமரிக்க அனுமதிக்கலாம்.

2. இரண்டு ஆண்டுகள் முடிவுற்ற பின் அப்பகுதியிலுள்ள வேறு ஒரு மகளிா் குழுவிடம் பராமரிப்பிற்கு ஒப்படைக்க ஏதுவாக மாநகராட்சி பொறுப்பில் ஒப்படைக்க வேண்டும்.

3. கழிப்பிட அன்றாட பராமரிப்பு , சுத்தம் செய்தல், சிறுபழுதுகள், ஊதியம் மற்றும் மின் கட்டணம் போன்றவற்றை கழிப்பிட வருவாயிலிருந்து செய்ய வேண்டும்.

4. அன்றாட செலவுகள் போக மீதி தொகை அந்தந்த குழுக்களின் தனி வங்கி கணக்கில் இருப்பு வைக்க வேண்டும்.

5. கணக்கில் உள்ள தொகையினை மாநகராட்சி சமுதாய அமைப்பாளருடன் ஆலோசனை செய்து பொது உபயோகத்திற்கு மட்டுமே செலவிட வேண்டும்.

6. கழிப்பிடங்களை சுத்தமாக நன்கு பராமரிக்க வேண்டும்.

7. மாமன்ற உறுப்பினா்கள் மற்றும் மாநகராட்சி அலுவலா்கள் தெரிவிக்கும் ஆலோசனை ஏற்று செயல்படுத்த வேண்டும்.

8. மாநகராட்சி ஆணையா் பிறப்பிக்கும் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

9. பராமரிப்பு குறை மற்றும் இதர குறைகளுக்காக கழிப்பிடத்தினை மாநகராட்சி வசம் ஒப்படைக்க கோரினால் உடன் ஒப்படைக்க வேண்டும்.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.8910/2008/அ5 (தெ)

## <u>மா.ம.தீா்மானம் எண் : 331 நாள் : 29.01.2009</u>

பொருளில் நிபந்தனை எண். 5-ல், கணக்கில் உள்ள தொகையில் 25% மகளிா் சுய உதவி குழுக்களுக்கு வழங்கலாம் எனவும், அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் எனவும் தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆா். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

பொருள் எண் 15

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி- தொழில்வரி உயர்வு செய்தல் - தொடர்பாக.

பார்வை - 1) அரசு ஆணை (MS ) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 12.01.99
2) நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் எண். 38714/2008/R 1 நாள் 13.08.2008
3) வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண். 10 நாள் 17.11.2008
4). மாமன்ற தீர்மானம் எண் 302 நாள் : 24.12.2008

--------

பார்வை 1-ல் காணும் அரசு ஆணை மற்றும் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் (தொழில்வரி) விதிகள் 1999, விதி 16-ன்படி, 1.10.1998 முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி 25% முதல் 35% வரை உயர்வு செய்து மன்றத்தால் நிர்ணயம் செய்யப்படவேண்டும் என உள்ளது.

தற்போது இம்மாநகராட்சியில் கீழ்க்கண்ட விகிதத்தில் 1.10.2003 முதல் தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வரிசை எண் | அரையாண்டு வருமானம் | தொழில் வரி |
|---|---|---|
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ. 75/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ. 188/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ. 375/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ. 563/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ. 750/- |

பார்வையிற் காணும் அரசு ஆணையின்படி 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை வரிஉயர்வு செய்து நிர்ணயம் செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது 17.11.08-ம் தேதிய தீர்மானம் எண். 10-ன்படி, ‘‘கோவை மாநகராட்சியில் தற்பொழுது சொத்துவரி, தண்ணீர்வரி உயர்வு செய்யப்பட்டுள்ளது. ஆகவே மீண்டும் தொழில்வரி அதிகப்படுத்தினால் மக்கள் துன்பப்படக்கூடும். ஆகவே விடுபட்ட தொழில்வரி இனங்களை கண்டுபிடித்து வரிவிதிப்பு செய்தாலே கணிசமான வரியின் தொகை அதிகமாக கிடைக்கும் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவில் தீர்மானிக்கப்படுகிறது ’’ என முடிவு செய்துள்ளது.

அரசு ஆணையின்படி, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி உயர்வு செய்யப்பட வேண்டும். கோவை மாநகராட்சியில் 1.10.08 முதல் தொழில்வரி குறைந்தது 25 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை உயர்வு செய்யப்பட வேண்டும்.

உயர்வு செய்வதால் ஏற்படும் தொழில்வரி பற்றிய விபரம்

| வ. எண் | அரையாண்டு வருமானம் | தொழில் வரி (ரூ.) | | | |
|---|---|---|---|---|---|
| | | தற்போது உள்ளது | 25% உயர்வு | 30% உயர்வு | 35% உயர்வு |
| 1 | ரூ. 21,000 வரை | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |
| 2 | ரூ. 21,001 முதல் 30,000 வரை | ரூ. 75/- | 94/- | 98/- | 101/- |
| 3 | ரூ. 30,001 முதல் 45,000 வரை | ரூ. 188/- | 235/- | 244/- | 254/- |
| 4 | ரூ. 45,001 முதல் 60,000 வரை | ரூ. 375/- | 469/- | 488/- | 506/- |
| 5 | ரூ. 60,001 முதல் 75,000 வரை | ரூ. 563/- | 704/- | 732/- | 760/- |
| 6 | ரூ. 75,000-க்கு மேல் | ரூ. 750/- | 938/- | 975/- | 1013/- |

எனவே தொழில்வரியை உயர்வு செய்து நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதில் பார்வை 4-ன்படி மாமன்றம் தனது தீர்மானத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள தொழில்வரி நிர்ணயம் செய்யப்படவேண்டிய அனைத்து நபர்கள் மற்றும் நிறுவனங்களை கண்டறிந்து தொழில்வரி வசூலிக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன்மூலம், தொழில்வரி கேட்பினை கணிசமாக உயர்த்த இயலும் என்பதனால் அதற்குரிய நடவடிக்கைகள் எடுத்து ஒட்டுமொத்த தொழில்வரி கேட்பினை உயர்த்த தீர்மானிக்கப்பட்டது என்றும் தொழில்வரி மூலம் வசூலிக்கப்படவேண்டிய கேட்பு, வசூல், நிலுவை முதலிய அனைத்து முழுமையான விபரங்களுடன் மீண்டும் மன்றத்திற்கு பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது என்றும் தீர்மானித்துள்ளது.

அதன்படி கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள தொழில்வரி நிர்ணயம் செய்யப்படவேண்டிய அனைத்து நபர்கள் மற்றும் நிறுவனங்களை கண்டறிந்து தொழில்வரி வசூலிக்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளது. மேலும் அரசு ஆணையின்படி, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்வரி உயர்வு செய்யப்பட வேண்டும் என்பதாலும், அவசர அவசியம் கருதியும் மாமன்றத்தின் அனுமதி கோரி மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அரசு ஆணையின்படி, தொழில் வரி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை குறைந்தபட்சமாக 25 சதவீதம் முதல் உயர்ந்த பட்சமாக 35 சதவீதம் வரை உயர்வு செய்யப்பட வேண்டும். எனவே 25 % மட்டும் உயர்வு செய்து நிர்ணயம் செய்யலாம்.

ந.க.எண். 11325/08/எம்.ஏ. 1

**மா.ம.தீர்மானம் எண் : 332 நாள் : 29.01.2009**

அலுவலகக் குறிப்பினை ஏற்று தொழில் வரி 25% உயர்வு, 1.4.09 முதல் செய்யலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 16

பொருள்: வணிக வளாக கடைகள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் உரிம காலம் மூன்று ஆண்டுகள் முடிவடைந்த கடைகள் - உரிமையாணை புதுப்பித்தல் - பற்றி.

---

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட கீழ்க்கண்ட வணிக வளாக கடைகளின் மூன்றாண்டு உரிமகாலம் முடிவடைகிறது.

மேற்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு சொந்தமான கடைகளை பொது ஏலம் விடுவதை தவிர்த்து குத்தகையினை நீடித்தல் குறித்து நெறிமுறைகளை பின்பற்ற உத்தரவிடப்பட்ட 30.12.2000-ம் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) (துறை அரசு ஆணை இருபதாண்டுகள்) எண்.147-க்கு இணங்க மாமன்ற தீர்மான எண்.164 நாள் 28.10.2004-ன்படி மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி கடைகளின் உரிமக் காலம் முடிவடைவதால் மேலும் மூன்றாண்டு காலத்திற்கு உரிமம் புதுப்பித்து உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்ய பார்வையில் காணும் அரசாணையின்படி கடைகளின் அளவு ஏற்கனவே உள்ள உரிமக் கட்டணம் உத்தேச நிர்ணய உரிமக் கட்டணம் ஆகிய விவரங்கள் அடங்கிய பட்டியல் வரி விதிப்பு மற்றும் நிதிக் குழுவின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்பட்டது. வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.2 நாள். 29.12.2008-ன்படி கடைகளின் வாடகையை 15% உயர்வு செய்து உரிமத்தை மூன்றாண்டு காலத்திற்கு புதுப்பித்து உத்திரவு வழங்க வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

எனவே வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தின்படி கடைகளின் உரிமம் கட்டணங்களை உயர்வு செய்து வசூலிக்க மன்றத்தின் முடிவுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேற்கு மண்டலம்
மூன்றாண்டுகள் முடிவடையும் கடைகள்

| வ. எண் | கடை எண். | உரிமக்காலம் முடியும் நாள் | தற்போதுள்ள மாத வாடகை ரூ. | அரசு ஆணை எண்.92 ந.நி. மற்றும் கு.வ.துறை நாள் 03.07.07-ன்படி குறைந்த பட்சம் 15% உயர்வு மாதவாடகை ரூ. | வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு பரிந்துரைப்படி கட்டண உயர்வு தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| | M.T.P. ரோடு மொத்த காய்கனி மார்க்கெட் (புதிய கடைகள்) 16 ½ x7=116 ச.அடி | | | | |
| 1 | 18 | 30.10.08 | 2070 | 2380 | |
| 2 | 25 | 31.10.08 | 3450 | 3968 | |
| 3 | 26 | 31.10.08 | 3395 | 3904 | |
| 4 | 27 | 31.10.08 | 3450 | 3968 | |
| 5 | 28 | 30.10.08 | 3438 | 3954 | |
| 6 | 29 | 30.10.08 | 3565 | 4100 | |
| 7 | 30 | 09.01.09 | 3795 | 4364 | |
| 8 | 31 | 30.10.08 | 3392 | 3901 | |
| 9 | 32 | 30.10.08 | 3450 | 3968 | |
| 10 | 16 | 09.01.09 | 2070 | 2380 | |
| 11 | 19 | 09.01.09 | 2030 | 2335 | |
| 12 | 20 | 09.01.09 | 2030 | 2030 | |
| 13 | 21 | 09.01.09 | 2030 | 2335 | |
| | சுப்ரி வீதி 10x5.5=55 ச.அடி. | | | | |
| 14 | 2A | 09.01.09 | 3278 | 3770 | |
| 15 | 3A | 27.11.08 | 2600 | 2990 | |
| | திவான் பகதூர் ரோடு 16 ½ x11=182 ச.அடி. | | | | |
| 16 | 1 | 20.08.08 | 5175 | 5951 | |
| | கிருஷ்ணசாமி ரோடு (வடக்கு) 17 x 10 =170 ச.அடி. | | | | |
| 17 | 8 | 22.05.08 | 4500 | 5175 | |
| | ஆரோக்கியசாமி ரோடு 1-22 - 37.47 ச.அடி. | | | | |
| 18 | 22 | 15.07.08 | 1310 | 1507 | |
| | தடாகம் ரோடு 20x11=220 ச.அடி | | | | |
| 19 | 25 | 31.08.08 | 1230 | 1415 | |
| 20 | 29 | 14.07.08 | 1225 | 1409 | |
| | ஆரோக்கியசாமி ரோடு (மேற்கு) 10 ¾ x20=215 ச.அடி | | | | |
| 21 | 16 | 09.01.09 | 3225 | 3709 | |
| 22 | 24 | 31.10.08 | 4140 | 4761 | |
| 23 | 25 | 31.10.08 | 3232 | 3717 | |
| | M.T.P. ரோடு மொத்த காய்கனி மார்க்கெட் 15x10=150 ச.அடி | | | | |
| 24 | 70 | 31.03.07 | 1161 | 1335 | |
| 25 | 71 | 31.03.07 | 1161 | 1335 | |
| 26 | 79 | 30.10.08 | 2030 | 2335 | |
| | கிருஷ்ணசாமி ரோடு வணிக வரி வசூல் மைய கட்டிடம் | | | | |
| 27 | | 27.11.08 | 5200 | 5980 | |

அலுவலகக் குறிப்பு - மன்றம் முடிவு செய்யலாம்.          ந.க. எண். 12497/2008/அ1 (மே)

**மா.ம.தீர்மானம் எண் : 333 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வணிக வளாக கடைகளுக்கு உரிமம் காலம் முடிவுற்ற தேதியிலிருந்து 31.03.09 வரை 15% மாத வாடகை உயர்வு செய்து வசூலிக்க தீர்மானிக்கப்பட்டது.

01.04.09 முதல் வெளிச்சந்தை மதிப்பின் அடிப்படையில் மறு மதிப்பீடு செய்து நிர்ணயம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 17

பொருள்- குத்தகை இனங்கள் - கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - குத்தகை இனங்களுக்கு 2009-2010-ம் ஆண்டுக்கு 1.4.09 முதல் 31.3.2010 முடிய உள்ள ஒராண்டு காலத்திற்கு கட்டணம் வசூலிக்க உரிமம் வழங்க பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருதல் - குறித்து.

---

குத்தகை இனங்கள் விபரம்

1) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை (28 நிரந்தரக் கடைகள், 144 மேடைக்கடைகள் நீங்கலாக.)
2) மேட்டுப்பாளையம் ரோடு தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.
3) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மார்க்கெட்டில் கட்டணம் வசூலிக்கும் உரிமை மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை.
4) ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி அருகிலுள்ள வாழைக்காய் மொத்த வியாபார மண்டியில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
5) பன்னீர் செல்வம் பூ மார்க்கெட் நவீன கழிப்படத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
6) மேட்டுப்பாளையம் ரோடு மொத்த காய்கனி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
7) மேட்டுப்பாளையம் ரோடு அண்ணா தினசரி மார்க்கெட் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
8) தடாகம் ரோடு நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
9) காந்திபார்க் நவீன கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
10) காந்திபார்க் நீச்சல் குளம் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
11) மேட்டுப்பாளையம் ரோடு எடை மேடையில் கட்டணம் வசூலிக்கும் உரிமை.
12) திவான் பகதூர் ரோடு மாநகராட்சி பள்ளி வளாக மைதானத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணம் வசூலிக்கும் உரிமை.

எனவே மேற்படி இனங்களை 2009-2010-ம் ஆண்டுக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை அச்சகத்தில் அச்சிடவும், தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும் அதன் பொருட்டு உண்டாகும் செலவினங்களை மாநகராட்சி ஏற்றுக் கொள்ளவும், மறு ஏலம் கோரும் இனங்களை அவ்வப்போது செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யவும், அதற்குண்டான விளம்பரக் கட்டணங்களை ஏற்கவும் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண்.1 நாள் 29.12.2008ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை ஏற்கவும், ஏற்கனவே உள்ள ஏல நிபந்தனைகள் மற்றும் கட்டண விகிதங்களை அங்கீகரிக்கவும், பொது ஏலம் நடத்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 12.1.2009ம் தேதி முன் அனுமதி பெறப்பட்டதனை ஒப்புதல் அளிக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் அளிக்கலாம். ந.க. எண். 12496/2008/அ1 (மே)

**மா.ம.தீர்மானம் எண் : 334 நாள் : 29.01.2009**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 29.12.2008 ம் தேதிய தீர்மானம் எண். 1ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 18

பொருள்- உரிம இனங்கள்-கோவை மாநகராட்சி-கிழக்கு மண்டலம்-2009-2010ம் ஆண்டிற்கான உரிம இனங்கள் - பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோருதல் - தொடர்பாக.

---------

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட 2009-2010ம் ஆண்டுக்கான கீழ் குறிப்பிட்டுள்ள வருடாந்திர உரிம இனங்களின் வாயிலாக 01.04.2009 முதல் 31.03.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பெறப்படும் பலன்களை அனுபவித்துக் கொள்வதற்கு உரிமம் வழங்க பொது ஏலம் /மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட வேண்டியுள்ளது.

வருடாந்திர உரிம இனங்கள் (01.04.2009 முதல் 31.03.2010 வரை)

1. சிங்காநல்லூர் தினசரி மார்க்கெட்டில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
2. சிங்காநல்லூர் ஆடு அறுவைமனை (8 கடைகளுடன் கூடியது) கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
3. உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
4. சௌரிபாளையம் ஆடு அறுவைமனை கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
5. சிங்காநல்லூர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
6. இராமநாதபுரம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
7. புலியகுளம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
8. பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி கட்டண கழிப்பிடம்-கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
9. ரேஸ்கோர்ஸ் ரோடு மாநகராட்சி கட்டண கழிப்பிடம்- கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
10. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் நுழையும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
11. சிங்காநல்லூர் பேருந்து நிலையம்- வாகன நிறுத்துமிடத்தில்-கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.
12. சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோருதல்.

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மூன்று தொலைபேசி பூத் அமைத்து நடத்திக்கொள்ளும் உரிமம் மாமன்ற தீர்மான எண்.284 நாள் 27.01.2006-ன்படி திரு. எஸ்.ஆர். ரவி என்பவருக்கு 10.02.2006 முதல் 09.02.2009 வரையிலான மூன்றாண்டுகளுக்கு ஒப்படை செய்யப்பட்டது. இதன் உரிமக் காலம் 09.02.2009 உடன் முடிவடைய உள்ளதனால், இவ்வினத்தையும் 2009-2010ம் ஆண்டுக்கான உரிம இனங்களுடன் சேர்த்து ஒப்படை செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம் /மறு ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரவும்,

மேற்காண் 1 முதல் 12 வரையிலான உரிம இனங்களை 2009-2010ம் ஆண்டிற்கு 01.04.2009 முதல் 31.03.2010 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பெறப்படும் பலன்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமம் வழங்கவும், சிங்காநல்லூர் பேருந்து நிலையத்தில் மூன்று தொலைபேசி பூத் அமைத்து நடத்திக் கொள்ளும் உரிமம் ஒப்படை செய்யும் நாள் முதல். மூன்றாண்டுகளுக்கு உரிமம் வழங்கவும் பொது ஏலம்/ மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் கோரவும், அதற்கான அறிவிப்புகள் கோரவும் அதற்கான அறிவிப்புகளை தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், அதற்கான செலவினங்களை ஏற்றுக் கொள்ளவும், மேலும் 2009-2010ம் ஆண்டுக்கான பொது ஏல நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகளை அங்கீகரிக்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண்.6 நாள் 29.12.2008-ன் மூலம் அனுமதிக்கலாம் என தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எனவே வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானத்தின் மீது மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.16117/ 2008/ கிஅ7)

**மா.ம.தீர்மானம் எண் : 335 நாள் : 29.01.2009**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 29.12.2008 ம் தேதிய தீர்மானம் எண். 6ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 19**

பொருள் : - குத்தகை - கோயமுத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ. உ. சி. பூங்கா வண்ண மீன் காட்சியகம் மற்றும் இதன் இருபுறமுள்ள காலியிடம், நேரு விளையாட்டு அரங்கம் அருகிலுள்ள காலியிடத்தில் நீரியல் பூங்கா அமைக்க நீண்டகால குத்தகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்வது –அரசின் உத்திரவு பெறுதல் - தொடர்பாக.

பார்வை :- தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், ஆழியார் கடிதம் ந.க.எண். 2935/அ/08 நாள் 31.12.2008.

---

கோயமுத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வ.உ.சி. பூங்காவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த வண்ண மீன் காட்சியகம் மற்றும் இதன் இருபுறமுள்ள காலியிடம், நேரு விளையாட்டு அரங்கத்திற்கு மேற்குபுறத்தில் உள்ள காலியிடத்தில் நீரியல் பூங்கா (Aqua Park) அமைக்க இடம் ஒதுக்கீடு வேண்டி தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், ஆழியார் அலகு விண்ணப்பித்துள்ளது.

மேற்படி, வ.உ.சி.பூங்காவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த வண்ண மீன்காட்சியகம் போதுமான பராமரிப்பு செய்யப்படாமல் பயனின்றி உள்ளது. மற்றும் நேரு விளையாட்டு அரங்கத்திற்கு மேற்குபுறமுள்ள 35 சென்ட் காலியிடமும் எந்தவித உபயோகம் செய்யப்படாமல் உள்ளது.

எனவே, பொது ஏலம் தவிர்த்து மேற்காணும் இடங்களை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு (அரசு நிறுவனம்) பொதுப் பணித்துறையின் வழிகாட்டி மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்து நீண்டகால குத்தகைக்கு கொடுப்பதற்கு அரசின் உத்திரவு பெறுவதற்கு உரிய பிரேரணை அனுப்பி வைக்க மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அரசுக்கு பிரேரணை அனுப்ப ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 094/08/அ5

**மா.ம.தீர்மானம் எண் : 336 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள வ.உ.சி. பூங்காவில் ஏற்கனவே செயல்பட்டு வந்த வண்ண மீன் காட்சியகத்தினை மட்டும் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு பொதுப்பணித்துறையின் வழிகாட்டி மதிப்பின்படி வாடகை நிர்ணயம் செய்து நீண்டகால குத்தகைக்கு வழங்க அரசிற்கு பிரேரணை அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 20**

கோயமுத்தூர் மாநகராட்சி பொதுக்கிடங்கு மற்றும் நான்கு மண்டலங்களிலும் உள்ள பழைய உபயோகமற்ற பொருட்களை 23-10-2007 அன்று பொது ஏலம் விடப்பட்டு மன்ற பொருள் வைக்கப்பட்டதில் மாமன்ற தீர்மான எண்.288 நாள்.27.03.2008 ன் படி வணக்கத்திற்குரிய மேயர், துணை மேயர், துணை ஆணையாளர், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் ஆகியோர்கள் கொண்ட குழு அமைத்து மறு ஏலம் விடுவதற்கு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி கடந்த 29-12-2008 அன்று நடக்கவிருந்த பொது ஏலமானது நிர்வாக நலன் கருதி 05-01-2009 அன்று ஒத்தி வைக்கப்பட்டது. மதிப்பீட்டுக் குழு 03-10-2008 அன்றும், ஆலோசனைக்குழு 08-12-2008 அன்றும் பொருட்களை மதிப்பீட்டுக் குழுவினரால் மதிப்பீடு செய்யப்பட்டது. கீழ்க்கண்ட 19 இன பொருட்களுக்கு கிலோ எடை அடிப்படையிலும்,டன் எடையிலும் மற்றும் ஒட்டு மொத்த தொகையாக (lot system) மதிப்பீட்டுக்குழு மற்றும் ஏற்பு குழுவினரால் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

விற்பனை செய்ய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையை ஏதாவது ஒரு தமிழ் நாளிதழில் கோவை பதிப்பகத்தில் மட்டும் 31-12-2008-ம் தேதிக்குள் ஒரு முறை மட்டும் விளம்பரம் செய்யுமாறு செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் கோவை மாவட்டம், அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்பேரில் மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்த அறிக்கை 31-12-2008-ம் தேதி அன்று தினத்தந்தி நாளிதழில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலரால் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ஏலம் அறிக்கையின்படி 05-01-2009 காலை 11.00 மணிக்கு மேற்படி பொருட்களை பொது ஏலம் நடத்துவதற்கு துணை ஆணையாளர், உதவி ஆணையாளர் (கணக்கு), நிர்வாக பொறியாளர் (மேற்கு) மற்றும் மாநகரப் பொறியாளர் (பொறுப்பு), உதவி ஆணையாளர் (மேற்கு), உதவி நிர்வாகப் பொறியாளர் (மின்சாரம்), நான்கு மண்டலங்களிலும் உள்ள உதவி நிர்வாகப் பொறியாளர்கள், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தலைவர் மற்றும் எதிர்கட்சிக்குழு தலைவர் ஆகியோர்கள் முன்னிலையில் ஏலம் நடத்தப்பட்டது. ஏலத்தில் 30 நபர்கள் கலந்து கொண்டனர். ஏலம் மட்டுமே நடைபெற்றது. ஒப்பந்தப்புள்ளி எதுவும் பெறப்படவில்லை. கீழ்கண்ட அதிகபட்ச விலை மற்றும் ஏலத் தொகை கோரியவர்கள் விவரம் மற்றும் விலாசங்கள் பின்வருமாறு.

| வ. எண் | பொருட்கள் விபரம் | விலை விபரம் ரூபாயில் | ஏலம் எடுத்தவர் பெயர் மற்றும் விலாசம் |
|---|---|---|---|
| 1. | உபயோகமற்ற ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் மற்றும் (out dated உதிரி பாகங்கள் | 15.00 / kg | திருவாளர்கள் சன் டிரேடர்ஸ், கோவை |
| 2. | உபயோகமற்ற பழைய HDPE தண்ணீர் டேங்க் | 5.75 / kg | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 3. | உபயோகமற்ற டைப்ரைட்டிங் மிசின், ஜெராக்ஸ் மிசின் மற்றும் பேட்டரிகள் | 13.00 / kg | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 4. | உபயோகமற்ற மின்சார உதிரி பாகங்கள், குடிநீர் விநியோக பொருட்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | 16.00 /kg | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 5. | உபயோகமற்ற 70 வாட்ஸ் மற்றும் 250 வாட்ஸ் பிட்டிங்குகள் | 21.00 / kg | திருவாளர்கள் ஜெம் பியரிங் கோவை. |
| 6. | மின்சார சோக்குகள் | 16.25 / kg | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 7. | உபயோகமற்ற யூ.ஜி. கேபிள்கள். | 20.00 / kg | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை. |
| 8. | எம். எஸ். ஆங்கிள் | 14000 / Ton | திருவாளர்கள் சன் டிரேடர்ஸ், கோவை |
| 9. | உபயோகமற்ற தண்ணீர் லாரி டேங்குகள் மற்றும் பழைய கழிவு நீர் டேங்குகள் | 13.25 / kg | திருவாளர்கள் சன் டிரேடர்ஸ், கோவை. |
| 10. | பழைய செய்திதாள்கள் | 3.25 / kg | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 11. | உபயோகமற்ற ஸ்டீல் டேபிள் மற்றும் இதர சாமான்கள் | 11.25 / kg | திருவாளர்கள் சன் டிரேடர்ஸ், கோவை |
| 12. | உபயோகமற்ற பழைய டயர்கள், டியுபுகள் மற்றம் பிளாபிகள் | 5000.00 | திருவாளர்கள் எ.எம். அண்ட் கம்பெனி, கோவை. |
| 13. | உபயோகமற்ற 75 எச்.பி. மோட்டார்கள், ஸ்விட்சுகள், ஸ்டாடர்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | 35000.00 | திருவாளர்கள் எ.எம். அண்ட் கம்பெனி, கோவை |
| 14. | உபயோகமற்ற டிரான்ஸ்பார்மர் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | 15500.00 | திருவாளர்கள் எ.எம். அண்ட் கம்பெனி, கோவை. |
| 15. | 40 வாட்ஸ் டியூப் லைட் பிட்டிங்குள் | 32100.00 | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை. |
| 16. | மின்சார பல்புகள் மற்றும் மின்சார உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக. | 5100.00 | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 17. | பழைய ஓடுகள் ஒட்டு மொத்தமாக | 4000.00 | திருவாளர்கள் எ.எம். அண்ட் கம்பெனி, கோவை |
| 18. | பழைய மரச் சாமான்கள் ஒட்டு மொத்தமாக. | 6000.00 | திருவாளர்கள் ஜெம் பியரிங், கோவை |
| 19 | எம்.எஸ்.பண்டல்ஸ் ஸ்கிராப்ட்ஸ் | 10/ per kg | திருவாளர்கள் சன் டிரேடர்ஸ், கோவை. |

## Comparative Statement

| வ.எண் | பொருட்கள் விபரம் | அலுவலகம் நிர்ணயம் செய்த விலை | ஏலம் தொகை ரூபாயில் | விலை மதிப்பீடு வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1. | உபயோகமற்ற ஆட்டோ மொபைல் உதிரி பாகங்கள் மற்றும் (out dated உதிரி பாகங்கள் | ரூ.16/-கி.கி. | 15.00 / kg | ரூ.1.00 குறைவு |
| 2. | உபயோகமற்ற பழைய HDPE தண்ணீர் டேங்க் | ரூ.3/-கி.கி. | 5.75 / kg | ரூ.2.75 அதிகம் |
| 3. | உபயோகமற்ற டைப்ரைட்டிங் மிசின், ஜெராக்ஸ் மிசின் மற்றும் பேட்டரிகள் | ரூ.30/-கி.கி. | 13.00 / kg | ரூ.17.00 குறைவு |
| 4. | உபயோகமற்ற மின்சார உதிரி பாகங்கள், குடிநீர் விநியோக பொருட்கள் மற்றும் பொதுவான பொருட்கள் | ரூ.15 /-கி.கி. | 16.00 /kg | ரூ.1.00 அதிகம் |
| 5. | உபயோகமற்ற 70 வாட்ஸ் மற்றும் 250 வாட்ஸ் பிட்டிங்குகள் | ரூ.90 /-கி.கி. | 21.00 / kg | ரூ.69.00 குறைவு |
| 6. | மின்சார சோக்குகள் | ரூ.25 /-கி.கி. | 16.25 / kg | ரூ.8.75 குறைவு |
| 7. | உபயோகமற்ற யூ.ஜி. கேபிள்கள். | ரூ.40 /-கி.கி. | 20.00 / kg | ரூ.20.00 குறைவு |
| 8. | எம். எஸ். ஆங்கிள் | ரூ.16000/- Per ton - | 14000 / Ton | ரூ.2000 குறைவு |
| 9. | உபயோகமற்ற தண்ணீர் லாரி டேங்குகள் மற்றும் பழைய கழிவு நீர் டேங்குகள் | ரூ.13/-கி.கி. | 13.25 / kg | ரூ.0.25 அதிகம் |
| 10. | பழைய செய்திதாள்கள் | ரூ.3.50/-கி.கி. | 3.25 / kg | ரூ.0.25 குறைவு |
| 11. | உபயோகமற்ற ஸ்டீல் டேபிள் மற்றும் இதர சாமான்கள் | ரூ.16 /-கி.கி. | 11.25 / kg | ரூ.4.75 குறைவு |
| 12. | உபயோகமற்ற பழைய டயர்கள், டியூபுகள் மற்றம் பிளாபிகள் | ரூ.5000 /-lot | 5000.00 | மதிப்பீட்டு தொகை |
| 13. | உபயோகமற்ற 75 எச்.பி. மோட்டார்கள், ஸ்விட்சுகள் ஸ்டாடர்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | ரூ.15000 /-lot | 35000.00 | ரூ.20000 அதிகம் |
| 14. | உபயோகமற்ற டிரான்ஸ்பார்மர் அதன் உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக | ரூ.5000 /-lot | 15500.00 | ரூ.10500 அதிகம் |
| 15. | 40 வாட்ஸ் டியூப் லைட் பிட்டிங்குள் | ரூ.20000/-கி.கி | 32100.00 | ரூ.10100 அதிகம் |
| 16. | மின்சார பல்புகள் மற்றும் மின்சார உதிரி பாகங்கள் ஒட்டு மொத்தமாக. | ரூ.2000 /-lot | 5100.00 | ரூ.3100 அதிகம் |
| 17. | பழைய ஓடுகள் ஒட்டு மொத்தமாக | ரூ.1000 /-lot | 4000.00 | ரூ.3000 அதிகம் |
| 18. | பழைய மரச் சாமான்கள் ஒட்டு மொத்தமாக. | ரூ.1950 /-per ton | 6000.00/per ton | ரூ.4050 அதிகம் |
| 19 | எம்.எஸ்.பண்டல்ஸ் ஸ்கிராப்ட்ஸ் | ரூ.6850 / Per ton | 10000/per ton | ரூ. 3150 அதிகம் |

வரிசை எண் 2,4,9,13,14,15,16,17,18 மற்றும் 19-க்கு அலுவலகம் நிர்ணயம் செய்த விலையைக் காட்டிலும் கூடுதலாக உள்ளது. வரிசை எண் 1,3,5,6,7,8,10,11-க்கு அலுவலகம் நிர்ணயம் செய்த விலையைக் காட்டிலும் குறைவாக உள்ளது. வ.எண் 12 மதிப்பீட்டுத் தொகையாக உள்ளது.

எனவே ஏலம் கோரியவர்களின் அதிகபட்சத் தொகையினை ஒப்புக்கொண்டு தொகைக்குரிய பட்டியலில் கண்டுள்ள பொருட்களை மேற்குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுக்கு வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண் 13847 /08/ எம்.டி.3.

**மா.ம.தீர்மானம் எண் : 337 நாள் : 29.01.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏலத் தொகைகளை ஏற்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 21

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – தமிழ்நாடு மாநகராட்சிகள் 1996 ம் ஆண்டு பணியமைப்பு விதிகள் வகுப்பு - III பிரிவு - I வகை – 1 மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பதவியிலிருந்து வகுப்பு - II வகை-3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர் / கணக்கு அலுவலர் பதவிக்கு தேர்ந்த பெயர் பட்டியல் தயாரித்தல் (Panel) – மாமன்றத்தின் ஒப்புதலுக்கு.

-----------

தமிழ்நாடு மாநகராட்சிகளின் 1996ம் ஆண்டு பொது பணியமைப்பு விதிகள் வகுப்பு–III பிரிவு–I வகை–1மற்றும் 2ல் உள்ள கண்காணிப்பாளர்/ உதவி வருவாய் அலுவலர் பதவியிலிருந்து வகுப்பு–II வகை–3 மற்றும் 4ல் உள்ள நிர்வாக அலுவலர்/ கணக்கு அலுவலர் பதவிக்கு பதவி உயர்வு அளிக்க இவ்வலுவலக செயல்முறைகள் எண். 14248/08/எம்சி.2, நாள் 06.12.2008ல் வெளியிடப்பட்ட கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர் பணிமூப்பு பட்டியலில் இருந்து அரசாணை எண்.368, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 18.10.93ன் படி தகுதி பெற்ற கீழ்கண்ட கண்காணிப்பாளர்/உதவி வருவாய் அலுவலர்களின் தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

பணியமைப்பு விதிகளின்படி கணக்கு அலுவலர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணிபுரிந்தவர்களைக் கொண்டு நிர்வாக அலுவலர் பணியிடம் நிரப்பப்படல் வேண்டும். அதுபோல் கணக்கு அலுவலர் பணியிடம் கணக்குப் பிரிவில் கண்காணிப்பாளராக இரண்டு வருடமும் கணக்கராக இரண்டு வருடமும் பணிபுரிந்தவர்களைக் கொண்டுதான் நிரப்பப்படல் வேண்டும்.

கோவை மாநகராட்சியில் தற்போது கணக்குப் பிரிவில் கண்காணிப்பாளர் என்றப் பதவியும் கணக்கர் என்ற பதவியும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே தற்போதைய பணியமைப்பு விதிகளின்படி ஒருவருக்கும் பதவி உயர்வுகள் வழங்க இயலாத நிலை உள்ளதால் பணிமூப்பின்படி பதவி உயர்வு பெற தகுதியான அலுவலர்களை மாமன்றத்தின் ஒப்புதலைப் பெற்று பதவி உயர்வுகள் வழங்கவும், பதவி உயர்வு வழங்கியதற்கு அரசின் பின்னேற்பு பெறலாம். மேலும், அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பணப் பயன்கள் வழங்கலாம்.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்/திருமதிகள்) |
|---|---|
| 01. | என்.ஞானசவுந்தரி, உதவி வருவாய் அலுவலர்/ கண்காணிப்பாளர். |
| 02. | ஆர்.பொன்னம்மாள், உதவி வருவாய் அலுவலர் / கண்காணிப்பாளர் |
| 03. | எம்.பொன்முடி, உதவி வருவாய் அலுவலர் |
| 04. | எல்.ஜெயசந்திரன், கண்காணிப்பாளர் |
| 05. | ஏ. லோகநாதன், உதவி வருவாய் அலுவலர் |
| 06. | எம். துரைராஜ், கண்காணிப்பாளர் |
| 07. | அகிலாண்டேஸ்வரி, கண்காணிப்பாளர் |

அலுவலக குறிப்பு: ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 14848/2008/எம்.சி.2

மா.ம.தீர்மானம் எண் : 338 நாள் : 29.01.2009

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 22

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 18.12.08 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தோகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைப்பிற்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 7870/08/ எம்.டி.4 | வார்டு எண் 36 சீதாலட்சுமி மகப்பேறு மருந்துவமனையில் முதல் தளத்தில் பி”பிளாக் கட்டிடம் கட்டுதல் | 25.00 | 31.10.08 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 5.30 அதிகம் | 3.32 அதிகம் |
| 2 | 10161/08 எம்.டி.2 | வார்டு எண்27 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அலுவலகம் கட்டுதல் | 25.00 | 31.10.08 முதல் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 4.62 அதிகம் | 3.63 அதிகம் |
| 3 | 7869/08/ எம்.டி.2 | வார்டு எண்36 சீதாலட்சுமி மகப்பேறு மருந்துவமனையில் தரை தளத்தில் பி”பிளாக் கட்டிடம் கட்டுதல் | 25.00 | 31.10.08 முதல் அழைப்பு | தி/ள். என்.பி.கே. அசோசியேட்ஸ் | 5.30 அதிகம் | 3.32 அதிகம் |
| 4 | 10159/8/ எம்.டி.2 | வார்டு எண் 27 அவினாசி ரோடு மாநகராட்சி வணிக வளாகத்தில் முதல் தளத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு (பராமரிப்பு பிரிவு) அலுவலகம் கட்டுதல் | 25.00 | 31.10.08 முதல் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 4.93 அதிகம் | 3.64 அதிகம் |
| 5 | 8054/08/ எம்.டி.4 | வார்டு எண் 49 கிழக்கு வெங்கடசாமி ரோட்டில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு குடியிருப்பு கட்டுதல் | 25.00 | 06.11.08 இரண்டாம் அழைப்பு | தி/ள். கே.சி.பி. இன்ஜினியர்ஸ் & பேப்ரிகேட்டர்ஸ் | 4.98 அதிகம் | 3.54 அதிகம |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 7870/08/எம்.டி.4

**<u>மா.ம.தீர்மானம் எண் : 339 நாள் : 29.01.2009</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 23

பொருள்- கோயமுத்தூர் மாநகராட்சி - உடற்பயிற்சி கூடம் - மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்வது - தொடர்பாக.

--------------

கோயமுத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான உடற்பயிற்சி கூடத்தில் அதை பயன்படுத்துபவர்கள் ஒரு அமைப்பினை ஏற்படுத்தி மாநகராட்சி உடற்பயிற்சி கூடம் என்ற நிலையினை மாற்றி அவர்களது சொந்த சொத்தினை போல் வைத்துக்கோண்டு உபயோகிப்பாளர்களிடம் மாநகராட்சியின் அனுமதி பெறாமல் அவர்களாகவே கட்டணம் நிர்ணயம் செய்து வசூல் செய்து கொண்டு வருகின்றார்கள்.

கட்டண ரசீதுகளிலும் அங்குள்ள முகவரி பலகைகளிலும் மாநகராட்சி பெயர் இல்லை. வசூல் செய்த தொகையினை மாநகராட்சிக்கு செலுத்துவதும் இல்லை. உடற்பயிற்சி கூடத்தினை பயன்படுத்த வருபவர்களிடம் அவர்கள் விரும்பினால் மட்டும் அனுமதிப்பது என்ற நிலை உள்ளது. இதுகுறித்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் அறிவிப்பு வழங்கி விபரம் கோரப்பட்டதில் எவ்வித பதிலும் வரப்பெறவில்லை.

மற்ற விளையாட்டுப் பகுதியில் மற்ற இடங்களை பயன்படுத்துபவர்கள் மாநகராட்சியிடம் உரிய அனுமதி பெற்றும் கட்டணம் செலுத்தி வருகின்றார்கள். இந்த உடற்பயிற்சி கூடங்கள் மாநகராட்சிக்கு சொந்தமானது என்பது கேள்விக்குறியாகிவிடும் என்பதால் கீழ்க்கண்ட உடற்பயிற்சி கூடங்களை மாநகராட்சி பொறுப்பில் எடுத்துக்கோண்டு உபயோகிப்பாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளபடி கட்டணம் நிர்ணயிக்க அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>உடற்பயிற்சி கூடங்கள்</u>

1. வ.ஊ.சி பூங்கா வார்டு எண்-27
2. கெம்பட்டி காலனி வார்டு எண்-43
3. ஸ்கீம் ரோடு ஆர்.எஸ்.புரம் வார்டு எண்-50
4. காந்தி பூங்கா வார்டு எண்-51
5. தியாகராய புது வீதி எண்.2-வார்டு எண்-36
6. மணிமேகலை வீதி வார்டு எண்-38

1. ஒரு உபயோகிப்பாளருக்கு மாதாந்திர கட்டணமாக ரூ.200/- நிர்ணயம் செய்யலாம்.
2. காலை 5 மணி முதல் 9.30 மணி வரையிலும் மாலை 5 மணி முதல் 9 மணி வரையிலும் செயல்பட அனுமதிக்கலாம்.
3. முதலில் மாநகராட்சி பணியாளர்களை கொண்டும் பின்னர் பொது ஏலம் மூலம் ஒப்படைத்து நிர்வகிக்கலாம்.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம் ந.க.எண் 16967/2008/MD1

**மா.ம.தீர்மானம் எண் : 340 நாள் : 29.01.2009**

மாநகராட்சிக்குச் சொந்தமான அனைத்து உடற்பயிற்சி கூடங்கள் குறித்து ஆய்வு செய்து முழு விபரங்களுடன் மீண்டும் மாமன்றத்திற்குப் பொருள் வைக்க தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 24**

பொருள். நிலம் - நில உரிமை மாற்றம் - கோயம்புத்தூர் வடக்கு வட்டம் விளாங்குறிச்சி கிராமம் - க.ச. எண். 452 காலையில் 20 செண்ட் நிலம் தி/வா. கான்பெடரேஷன் ஆப் இந்தியன் இண்டஸ்ட்ரி நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்தல் - தொடர்பாக.

பார்வை. மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கடித ந.க. எண். 36497 நாள். 8.2.2008.

* * *

பார்வையில் குறிப்பிட்டுள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட வடக்கு மண்டலத்தின் பகுதியில் அமைந்துள்ள விளாங்குறிச்சி கிராமம் க.ச. எண். 452 –ன் காலையில் 20 செண்ட் நிலத்தினை தி/வா. கான்பெடரேஷன் ஆப் இந்தியன் இண்டஸ்ட்ரி நிறுவனத்திற்கு நில உரிமம் மாற்றம் செய்து வழங்கவும், இந்நிலம் வருவாய் ஆவணங்களில் " கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி" எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது எனவும் மேலும் இந்நிலம் அரசாணை எண். 900 வருவாய் துறை நாள். 18.10.1993 –ன்படி சமூகநலத்துறைக்கு முன்நுழைவு அனுமதி வழங்கப்பட்ட 25.19 ஏக்கர் நிலங்களில் உள்ளது எனவும், எனவே மேற்குறிப்பிட்டுள்ள 20 செண்ட் நிலத்தினை தி/வா. கான்பெடரேஷன் ஆப் இந்தியன் இண்டஸ்ட்ரி நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய கோயம்புத்தூர் மாநகராட்சி மன்றத்தின் கருத்துரையினை தீர்மானமாக அனுப்புமாறு கோரியுள்ளார்கள்.

எனவே மேற்கூறிய இடத்தினை தி/வா. கான்பெடரேஷன் ஆப் இந்தியன் இண்டஸ்டரி நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய மாநகராட்சிக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என இப்பொருள் குறித்து நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக் குழுவின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டதில் குழு தனது தீர்மான எண். 69 நாள். 23.12.2008 -ல் "மாமன்றத்திற்கு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது" என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளதை மாநகர மன்றத்தின் ஓப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-ஏற்கலாம் ந.க.எண். 2423 / 08 / எம்.எச்5

**மா.ம.தீர்மானம் எண் : 341 நாள் : 29.01.2009**

நகரமைப்பு மற்றும் அபிவிருத்தி நிலைக்குழுவின் 23.12.2008 ம் தேதிய தீர்மானம் எண். 69 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஏற்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 25**

பொருள்- கோயம்புத்தூர் மாநகராட்சி – தனியார் கட்டிடங்கள் - மின் இணைப்பு தடையின்மை சான்றிதழ் - தொடர்பாக.

- - -

கோயம்புத்தூர் மாநகராட்சி பகுதியில் புதிதாக கட்டிடம் கட்டி முடித்து அதற்கு மின் இணைப்பு வேண்டி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பொதுமக்கள் விண்ணப்பிக்கும் பொழுது கட்டிட வரைபடத்திற்கு, ஒப்புதல் பெற்ற திட்ட அனுமதி நகலையும் விண்ணப்பத்துடன் இணைத்தால் மட்டுமே புதிய மின் இணைப்பு வழங்கப்படுகிறது. சிறிய அளவிலான மனை வைத்துள்ள பொருளாதார அடித்தளத்தில் உள்ள மக்கள் தாம் கட்டியுள்ள கட்டிடத்திற்கு அனுமதி கிடைக்காது என்கிற காரணத்தினால், மாநகராட்சியிடம் கட்டிட அனுமதி பெறாமல் கட்டிடங்களை கட்டிவிட்டு மின் இணைப்பு கோருகிறார்கள். அனுமதியற்ற அனைத்து கட்டிடங்களுக்கும் தமிழ்நாடு மின்வாரிய சட்டப்படி புதிய இணைப்பு வழங்க இயலாது என்பதால் அது போன்ற அனுமதியற்ற கட்டிடங்களை, குடியிருப்புகளை கட்டியவர்கள் புதிய மின் இணைப்பு பெற இயலாமல் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

ஆயிரம் சதுரடி பரப்பளவிற்குள் தனித்த வீடுகள் கட்டியவர்களுக்கு கட்டிட வரைபட அனுமதி நகல் கேட்காமல் புதிய மின் இணைப்பு வழங்க ஆவன செய்ய கோரி மாமன்றம் தனது தீர்மானம் எண். 280 நாள். 28.11.2008-ல் தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து உரிய வழிமுறையாக தமிழ்நாடு மின் வாரிய தலைவர் அவர்களுக்கு 24.12.2008-ல் முன்மொழிவு மாநகராட்சியால் அனுப்பப்பட்டுள்ளது. 12.1.2009 அன்று நடைபெற்ற மாமன்றத்தின் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் தமிழ்நாடு மின்வாரிய பொறியாளர்களையும் வரவழைத்து, இப்பொருள் தொடர்பாக, விரிவாக விவாதிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் 1000 சதுரடி பரப்புக்குள் கட்டிடம் கட்டியவர்களுக்கு கட்டிட அனுமதி நகல் கோராமல் மாநகராட்சியின் இசைவு கடிதத்தை பெற்று கொண்டு புதிய மின் இணைப்பு வழங்க தமிழ்நாடு மின்வாரியத்தை நிர்பந்திக்கலாம் என முடிவு செய்யப்பட்டது.

அவ்வாறு வழங்கும் மாநகராட்சியின் இசைவுக் கடிதம் மூலம், கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் நிலை, அதன் மீதான மாநகராட்சியின் நிலை பற்றிய விபரங்கள் இருக்கும். இப்பிரச்சனையை அரசின் கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டு செல்லப்பட்டுள்ளதால் அரசிடமிருந்து முடிவு வரும் வரை பாமர மக்கள் கட்டியுள்ள குடியிருப்புகளுக்கு மாநகராட்சியின் இசைவுக் கடிதத்தை பெற்றுக் கொண்டு புதிய மின் இணைப்பு வழங்க மாமன்றத்தின் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு. மாமன்றம் முடிவு செய்யலாம். ந.க. எண். 16676 / 08 / எம்.எச்5.

<u>மா.ம.தீர்மானம் எண் : 342 நாள் : 29.01.2009</u>

கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்பட்டு மின்சார வாரியத்திடம் மின் இணைப்பு பெற மாநகராட்சியின் ஆட்சேபனையின்மை சான்று கோரி விண்ணப்பம் செய்துள்ள குடியிருப்பு கட்டிடங்களுக்கு மட்டும் கட்டிடங்கள் குறித்தான நிலை மற்றும் மாநகராட்சி சொத்துவரி விதிப்பு முதலிய விபரங்களுடன் கூடிய இசைவுக் கடிதத்தினை மின்சார வாரியத்திற்கு வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 26

பொருள். கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - 18 வது வார்டு – அலமு நகரில் - மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடமான டி.எஸ். எண். 11 / 1276 மற்றும் 1278 பாகம் இடத்தை – திருமதி. எம்.வி. மீனாட்சி மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தவறுதலாக விற்பனைக்கு வாங்கி மாநகராட்சியின் முன் அனுமதி இல்லாமல், உரிமம் பெறாமல் கட்டிடம் கட்டியது – சம்பந்தமாக.

- - -

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டலம் 18 -வது வார்டு அலமு நகரில் மாநகராட்சிக்கு சொந்தமான பொது ஒதுக்கீடு இடமான டி.எஸ். எண். 11 / 1276 மற்றும் 1278 பாகம் இடத்தை திருமதி. எம்.வி. மீனாட்சி மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தவறுதலாக விற்பனைக்கு வாங்கி மாநகராட்சியின் முன் அனுமதி இல்லாமல், உரிமம் பெறாமல் கட்டிடம் கட்டி இருந்தனர்.

மனுதாரர்கள் இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் டபிள்யூ. பி.எண். 14327 / 95- ன் படி வழக்கு தொடர்ந்தார்கள். சென்னை உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் மேற்படி இடம் பொது ஒதுக்கீடு என அறிவித்து மாநகராட்சிக்கு சாதகமான தீர்ப்பு வழங்கியது. சென்னை உயர்நீதி மன்றம் வழங்கிய நீதிமன்ற உத்தரவு மற்றும் திரு. ஆர். சிவக்குமார், மாநகராட்சி வழக்கறிஞர் அவர்கள் கருத்துரையின்படி மனுதாரர்கள் சட்டத்திற்கு புறம்பாக மாநகராட்சி இடத்தில் கட்டிய கட்டிடத்தை இடிக்க 16.05.2008 -ந் தேதிய ஆணையரின் உத்தரவின்படி அறிவிப்பு செய்யப்பட்டது.

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண். 18, நகரளவு எண். 11 / 1276 மற்றும் 1278 பாகம் எல்.பி / ஆர்.சி.சி.என். எண். 22 / 83 -ன்படி அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் பொது ஒதுக்கீட்டு இடத்தை தவறுதலாக விற்பனைக்கு வாங்கி மாநகராட்சி முன் அனுமதி இல்லாமல் மற்றும் உரிமம் பெறாமல் கட்டப்பட்டிருந்த கட்டிடத்தை 20.05.2008 -ம் தேதி காலை அப்புறப்படுத்தப்பட்டது.

தற்போது கட்டிடங்கள் அப்புறப்படுத்தப்பட்டு விட்டதால் ஏற்கனவே அந்த கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கீழ்க்கண்ட வரிகளை ரத்து செய்வதோடு வரிவிதிப்பு எண்களை கேட்பிலிருந்து நீக்கம் செய்யலாம்.

| வரிவிதிப்பு எண். | வரிதாரர் பெயர் | கதவு எண் | 11.06.2008 முடிய நிர்ணயிக்கப்பட்ட வரி தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 322357 | எம்.வி. மீனாட்சி | 5 B | ரூ. 21,102 /- | சொத்து வரி |
| 32048 | எம்.வி. மீனாட்சி | 5 B | ரூ. 1,374 /- | குடிநீர் கட்டணம் |
| 323945 | வி. கிருஷ்ணமூர்த்தி | 5 B | ரூ. 13,490 /- | சொத்து வரி |

மேற்கண்ட நிலுவை வரிகளை ரத்து செய்தும், வரிவிதிப்புகளை கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கபட்டதில் வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தனது தீர்மான எண். 1, நாள். 17.11.08 –ல் ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு. ஒப்புதல் அளிக்கலாம் ந.க. எண். 9686 / 2008 /ஏ1 (வ).

**மா.ம.தீர்மானம் எண் : 343 நாள் : 29.01.2009**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 17.11.08 ம் தேதிய தீர்மானம் எண். 1 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் அளிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 27

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலம் பகுதிக்கு உட்பட்ட சொத்துவரி உரிமைதாரர்கள் தங்களது சொத்திற்கு விதிக்கப்பட்ட காலியிட வரி மற்றும் சொத்துவரி அதிகம் என ஆட்சேபனை மேல் முறையீடு செய்துள்ளார்கள். அதன் பேரில் கோவை மாநகராட்சி மேல் முறையீடு தீர்ப்பாயம் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரப்படி காலியிட மற்றும் சொத்துவரியினை குறைத்து உத்திரவு வழங்கி உள்ளது.

சொத்து வரி மேல் முறையீடுதாரர்களின் விபரம் மற்றும் மேல் முறையீடு தீர்ப்பாயத்தில் வரி குறைக்கப்பட்ட விபரம் பட்டியல் தனியாக பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

(பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

1. வரிசை எண். 1, 2, 3, ஆகிய இனங்களுக்கு 10% முதல் 20% வரி குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளலாம்.

2. வரிசை எண் 5, 6, ஆகிய இனங்களுக்கு 36% மற்றும் 54% வரி குறைத்து கொடுக்கப்பட்டுள்ளது. மனு அப்பீல் செய்ய காலதாமதம் ஆகிவிட்டபடியாலும் அதற்கு வழி வகை இல்லாததாலும் வரி குறைப்பை ஏற்றுக்கொள்ளலாம்.

3. வரிசைஎண் 4, 7, 8, 9 ஆகிய இனங்களுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்ட நாட்களுக்கு முந்தைய 6 ஆண்டுகளுக்கு மட்டுமே காலியிட வரி செலுத்த வேண்டும் என்று மேல் முறையீடு தீர்ப்பாயத்தின் அடிப்படையில் காலியிடவரி ரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் சொத்துவரியை பொறுத்து வரிசை எண். 4, 7 மற்றும் 8 இனங்களுக்கு 15% வரை வரி குறைப்பு செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக் கொள்ளலாம்.

மேற்காண் விபரங்களை தெரிவித்து வரி விதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டதில் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது 25.08.08 ந் தேதிய தீர்மான எண். 48 ல் ஒப்புதல் அளித்துள்ளது. இது தொடர்பாக மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண் 06536/08/A3 (N)

**மா.ம.தீர்மானம் எண் : 344 நாள் : 29.01.2009**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் 25.08.09 ம் தேதிய தீர்மானம் எண். 48 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 28

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 17.01.09 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் | விலைக் குறைப்பிற்கு பின் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9376/08/ எம்.டி.2 | வார்டு எண் 2 கோவை மாநகராட்சி பீளமேடு உயர்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல். | 25.00 | 30.12.08 இரண்டாம் அழைப்பு | திரு.ஏ. விஜயகுமார் | 4.64 அதிகம் | 3.06 அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு- வரிசை எண்.1-ல் உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 9376/08/எம்.டி.2

**மா.ம.தீர்மானம் எண் : 345 நாள் : 29.01.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 29

கோவை மாநகராட்சி எல்லைக்குட்டபட்ட பகுதிகளில் உள்ள 761 வரன் முறைபடுத்தப்பட்ட மனைப்பிரிவுகளுக்கு குடிநீர் லாரி மூலமாக ஏழு நாட்களுக்கு ஒரு முறை 1542 டிரிப்புகள் கொடுக்கப்பட்டு வந்தது. தற்போது பகிர்மான குடிநீர் குழாய்கள் பதிக்கப்படாத பகுதிகளில் குழாய்கள் பதிக்கப்பட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது லாரி மூலம் 733 லாரி டிரிப்புகள் மட்டுமே விநியோகம் செய்யப்படடு வருகிறது.

கோவை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மனைப்பிரிவுகளுக்கு லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்ய 19.02.2008-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருவாளர்கள் பாரதிராஜா வாட்டர் சப்ளையர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மேற்படி பணியினை வழங்க மாமன்ற தீர்மானம் எண் 82 நாள் 28.05.2008-ன் படி ஆறுமாத காலத்திற்கு மட்டும் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய அனுமதிக்கப்பட்டது. அதன்படி இக்காலம் ஜனவரி 2009 உடன் நிறைவடைகிறது.

கோவை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போது குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சில பகுதிகளில் தொழில் நுட்ப சாத்தியக்கூறுகள் மற்றும் கட்டமைப்பு வசதிகள் இல்லாத பகுதிகளை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புரைமைப்புத் திட்டத்தில் பில்லூர் இரண்டாவது குடிநீர் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிசைப்பகுதிகளை R.C.C குடியிருப்பு கட்டிடம் கட்ட குடிசை மேம்பாட்டுத்திட்டத்தில் (BSUP) பணி நடைபெற்று வருகிறது. அந்தப் பகுதிகளுக்கும் லாரி மூலம் குடிநீர் விநியோகக்கப்பட்டு வருகிறது.

பில்லூர் குடிநீர் திட்டத்தில் அவ்வப்போது ஏற்படும் மின் தடை மற்றும் குழாய் உடைப்பு ஏற்படும் காலங்களில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு லாரி மூலம குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சில வரன்முறைபடுத்தப்பட்ட பகுதிகளுக்கும் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால், ஏற்கனவே குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள, தற்போது குடிநீர் விநியோகம் செய்து வரும் ஒப்பந்ததாரர் மூலமாகவே லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்ய மேலும் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளவும் அதற்குண்டாகும் செலவினத்திற்கு அனுமதிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு-அனுமதிக்கலாம் ந.க.எண். 4480/2007/ப.வ.,எம்.டி.4

**மா.ம.தீர்மானம் எண் : 346 நாள் : 29.01.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 30

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, அட்டவணை-1 விதி 19 (2)-ன்படி 26.12.2008 ம் தேதியன்று நடைபெற்ற கணக்குகள் குழுவின் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-பதிவு செய்யலாம் ந.க.எண். 4808/05/பி.13

**மா.ம.தீர்மானம் எண் : 347 நாள் : 29.01.2009**

பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 31

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, அட்டவணை-1 விதி 19 (2)-ன்படி 11.12.2008 ம் தேதியன்று நடைபெற்ற கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழுவின் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு-பதிவு செய்யலாம் ந.க.எண். 1128/07/கே.9

**மா.ம.தீர்மானம் எண் : 348 நாள் : 29.01.2009**

பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 32**

**கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, அட்டவணை-1 விதி 19 (2)-ன்படி 23.12.2008 ம் தேதியன்று நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழுவின் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு-பதிவு செய்யலாம் ந.க.எண். 403/07/எம்.எச். 5**

**மா.ம.தீர்மானம் எண் : 349 நாள் : 29.01.2009**

**பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**பொருள் எண் 33**

**கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, அட்டவணை-1 விதி 19 (2)-ன்படி 29.12.2008 ம் தேதியன்று நடைபெற்ற வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு-பதிவு செய்யலாம் ந.க.எண். 15294/08/எம்.எ. 1**

**மா.ம.தீர்மானம் எண் : 350 நாள் : 29.01.2009**

**பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**பொருள் எண் 34**

**பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி –ஊதியக்குழு இடைக்கால நிவாரண நிலுவைத் தொகை - பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்குவது –தொடர்பாக.**

**பார்வை- அரசாணை எண். 10 மற்றும் 11 நிதித்துறை நாள்- 13.01.2009.**

-----------------

**பார்வையில் கண்ட அரசாணையில், இம்மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கும் 6-வது ஊதியக்குழு இடைக்கால நிவாரண நிலுவைத் தொகையாக மூன்று மாத ஊதியம் (அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம், அகவிலைப்படி மற்றும் தனி ஊதியம் ஆகியன) 31.01.2009ற்குள் வழங்க உத்திரவிடப்பட்டு உள்ளது.**

**எனவே மேற்படி அரசாணை எண். 10 மற்றும் 11 நிதித்துறை நாள் 13.01.2009 மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம். ந.க.எண். 433/2009/ எம்.சி 2**

**மா.ம.தீர்மானம் எண் : 351 நாள் : 29.01.2009**

**பதிவு செய்யப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**